प्रावृषि क्षमाधरस्य निद्रितो गुहान्तरे
सत्त्ववान्मृगाधिपः प्रबुध्य दाहकेक्षितैः ।
केसराण्युदञ्चयन् विधूय वर्ष्म संचलन्
दीर्घयन्वपुर्यथा सगर्जितं प्रतिष्ठते ॥

तद्वदेव हे तमालपुष्पनील ! सांप्रतं
आलयादितोभ्युपेत्य सुन्दरे समुज्ज्वले ।
वीरसिंहविष्टरे निविश्य नश्चिकीर्षितं
कार्यमभ्यवेत्य संप्रसीद हेऽस्मदङ्गने ! ॥ २३ ॥

அன்றிவ்வுலகமளந்தாய்! அடி போற்றி
சென்றங்குத்தென்னிலங்கைசெற் ...! திறல் போற்றி
பொன்றச் சகட முதைத்தாய்! புகழ் போற்றி
கன்று குணிலா வெறிந்தாய்! கழல் பேற்றி
குன்று குடையா வெடுத்தாய்! குணம் போற்றி
வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல் போற்றி
என்றென்றுன் சேவகமே யேத்திப்பறை கொள்வான்
இன்றுயாம்வந்தோம் இரங்கேலோ ரெம்பாவாய்! 24

प्रागिमां महीममाः पदद्वयं विवर्धतां
एत्य भग्नदाक्षिणात्यलंक सत्त्वमेधताम् ।
शाकटासुरं पदा न्यहन् ! यशो विवर्धतां
वत्सरूपरक्ष आक्षिपः पदं विवर्धतां ॥

छत्रवत्त्वयाऽद्रिरुद्धृतो गुणो विवर्धतां
त्वत्करे विजित्य वैरहन्तृशूलमेधताम् ।
त्वामिति स्तवैः प्रशंस्य भेरिकां निनीषवः
संप्रति स्म आगता दयस्व हेऽस्मदङ्गने ! ॥ २४

ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்து வளர,
தரிக்கிலானாகித்தான் தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற நெடுமாலே! உன்னை
அருத்தித்து வந்தோம் பறை தருதியாகில்
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்! 25

एकमातुरात्मजः प्रभूय तां निशीथिनीं
अन्यमातुरात्मभूरभूर्निलीय वर्धितः ।
तन्न सोढुरिच्छतः स्वयं विचिन्त्य ते क्षतिं
कंसरक्षसोधिकुक्षि विस्खलय्य चिन्तितम् ॥

प्रेममुग्ध ! तत्र वीतिहोत्रवत्स्थित ! प्रभो !
प्रार्थयन्त्य आगता ददासि भेरिकां यदि ।
युक्तसंपदं श्रियं प्रकीर्त्य सेविकास्तव
निर्विषादहर्षिता भवाम हेऽस्मदङ्गने ! ॥ २५ ॥

மாலே! மணிவண்ணா! மார்கழி நீராடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்
ஞாலத்தை யெல்லாம் நடுங்க முரல்வன
பாலன்ன வண்ணத்துன் பாஞ்சசன்னியமே
போல்வன சங்கங்கள் போய்ப்பாடுடையனவே
சாலப்பெரும் பறையே பல்லாண்டிசைப்பாரே
கோல விளக்கே கொடியே விதானமே
ஆலினிலையாய்! அருளேலோ ரெம்பாவாய். 26

प्रीतिमुग्ध ! रत्नवर्ण ! मार्गशीर्षमज्जनैः
पूर्वकैः व्रतैः कृतैरपेक्षितं श्रृणु प्रभो ।
सर्वलोककम्पनक्षमप्रचण्डघोषिणः
दुग्धवर्णतावकीनपाञ्चजन्यसंनिभाः ॥

शस्तवैभवा असंख्यकम्बवः पृथुस्तथा
स्फीतभेरिकावरश्च भद्रवादगायकाः ।
सौम्यदीपिका ध्वजो वितानमित्यदोऽखिलं
वाटपत्रसंश्रय ! प्रसीद हेऽस्मदञ्जने ! ॥ २६ ॥

கூடாரை வெல்லும் சீர்கோவிந்தா! உன் தன்னைப்
பாடிப்பறை கொண்டு யாம் பெறு சம்மானம்
நாடுபுகழும் பரிசினுல் நன்ருக
சூடகமே தோள் வளையே தோடே செவிப்பூவே
பாடகமே யென்றனைய பல்கலனும் யாமணிவோம்
ஆடையுடுப்போம் அதன் பின்னே பாற்சோறு
மூட நெய் பெய்து முழங்கை வழி வாரக்
கூடியிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். 27

अश्रयद्वशीकृतौ गवामपीन्द्र दक्ष ते
कीर्तनेन भेरिकामवाप्य माननं तु नः ।
देशशस्यमानपारितोषिकेण कङ्कणं
कुण्डलानि कर्णपुष्पमंसभूषणं तथा ॥

नूपुराणि भूषणानि यैर्विभूषयेमहि
नव्यवस्त्रवेष्टितास्ततश्च पायसौदनम् ।
गूहितुं समर्पिते घृते कपोणिसंस्नुते
स्याम निर्वृता वयं समेत्य हेऽस्मदङ्गने ! ॥ २७ ॥

கறவைகள் பின் சென்றுகானம் சேர்ந்துண்போம்
அறிவொன்றுமில்லாத ஆய்க்குலத்து, உன் தன்னைப்
பிறவி பெறுந்தனைப் புண்ணியம் யாமுடையோம்
குறைவொன்றுமில்லாத கோவிந்தா! உன் தன்னோடு
உறவேல் நமக்கிங்கொழிக்க ஒழியாது
அறியாத பிள்ளைகளோம் அன்பினால், உன் தன்னைச்
சிறு பேரழைத்தனவும் சீறியருளாதே
இறைவா! நீ தாராய் பறையேலோ ரெம்பாவாய். 28

पृष्ठतोऽनुगत्य गाः वनस्थलीषु भुञ्जति
ज्ञानलेशहीनमूढवल्लवान्वये वयम् ।
तावकीनजन्म लब्धुमत्र पुण्यशालिनः
न्यूनताविहीन हे गवां त्वयेन्द्र नः पुनः ॥

बन्धुता व्यपोहिताऽपि न व्यपोहनक्षमा
प्रेमतो हि बालिशा विमुग्धबालिका वयम् ।
त्वां समाह्वयेम हीननामभिर्न कुप्य तत्
नाथ ! भेरिकां प्रसीद देहि हेऽस्मदङ्गने ! ॥ २८ ॥

சிற்றஞ்சிறுகாலே வந்துன்னைச் சேவித்துன்
பொற்றாமரையடியே போற்றும் பொருள் கேளாய்
பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்து நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமற் போகாது
இற்றைப்பறை கொள்வானன்று காண் கோவிந்தா!
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே யாவோம் உனக்கே நாமாட் செய்வோம்
மற்றை நம் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய். 29

प्रत्युषस्युपेत्य नस्त्वदीयसेवने तथा
स्वर्णपद्मपादयुग्मकीर्तने फलं श्रृणु ।
धेनुबृन्दचारणेन जीवतां कुलेभवः
नार्हसि त्वमाप्तकिंकरीरुपेक्षितुं हि नः ॥

भेरिकोपलिप्सयाधुना न केवलं परं
शश्वदेव सप्तसप्तजन्मसु त्वया सह ।
बन्धुभावबन्धितास्तवैव सेविका वयं
संनिवर्तयेप्सितान्तराणि हेऽस्मदङ्गने ! ॥ २९ ॥

வங்கக்கடல் கடைந்த மாதவனைக் கேசவனைத்
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி
அங்கப்பறை கொண்டவாற்றை அணிபுதுவைப்
பைங்கமலத்தண்தெரியல்பட்டர்பிரான
கோதை சொன்ன

சங்கத்தமிழ்மாலை முப்பதும் தப்பாமே
இங்கிப்பரிசுரைப்பார் ஈரிரண்டு மால்வரைத்தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத்திருமாலால்
எங்கும் திருவருள் பெற்றின்புறுவரெம்பாவாய். 30

वीचिमालिमाथिनं हि माधवं हि केशवं
पूर्णचन्द्ररश्मिमुख्य एत्य चारुमण्डनाः ।
कीर्तनेन तत्र भेरिकामवापुरित्थमि-
त्यब्जमाल्य* भट्टनाथकन्ययात्र गोदया ॥

द्रामिडीविनिर्मितां दशत्रयीमविस्खलन्
कीर्तयन्नरश्चतुर्नगोपमांसशोभिनः ।
श्रीयुतस्य रक्तनेत्रवक्त्रशोभिनो हरेः
नन्दति प्रसादतस्समन्ततोऽस्मदङ्गने ! ॥ ३० ॥

---

* विष्णुचित्त इति पाठान्तरम् ।

॥ श्रीः ॥

श्रीभक्तांघ्रिरेणोः
श्रीमालाप्रबन्धस्य मुखपद्यानि

மற்றொன்றும் வேண்டா மனமே மதிளரங்கர்
கற்றினம் மேய்த்த கழலிணைக் கீழ்—உற்ற
திருமாலை பாடும் சீர்த் தொண்டரடிப் பொடி எம்
பெருமானை எப்பொழுதும் பேசு.

मुखपद्यम्

*नान्यद्व्यपेक्ष्यं मम चित्त वप्र-
रङ्गस्य वत्साचरणोत्सुकांघ्र्योः ।
श्रीमालिकां गायत एव कीर्तिं
भक्तांघ्रिरेणोः भज संततं त्वम् ॥

---

* इदं विवर्तनं विल्लूर् नडादूर् श्री करुणाकरेण कृतम् ॥

॥ श्रीः ॥

திருமாலை

॥ श्रीमाला ॥

காவலிற்புலனைவைத்துக் கலிதன்னைக்கடக்கப்பாய்ந்து,
நாவலிட்டுழிதருகின்றோம் நமன்தமர்தலைகள்மீதே,
மூவுலகுண்டுமிழ்ந்த முதல்வா! நின் நாமம்கற்ற,
ஆவலிப்புடைமைகண்டா யரங்கமாநகருளானே!

तीर्त्वाऽजितेन्द्रियगणाः कलिमुत्प्लुतेन
धृत्वा ध्वजं कृतपदाः यमभृत्यमूर्ध्नि ।
हे ! भुक्तवान्तभुवनत्रय ! पश्य यत्स्मः
तन्नामकीर्तनबलात् तव रङ्गधामन् ! ॥ १ ॥

பச்சைமாமலைபோல்மேனி பவளவாய்கமலச் செங்கண்
அச்சுதா! அமரரேறே! ஆயர்தம்கொழுந்தே! யென்னும்'
இச்சுவைதவிரயான்போயிந்திரலோகமாளும்,
அச்சுவைபெறினும்வேண்டேனரங்கமாநகருளானே!

रक्तोत्पलाक्ष ! हरिदद्रिभ ! विद्रुमास्य !
गोपालपल्लव ! सुरर्षभ ! चाच्युतेति ।
एनं विना रसमहं सुरराट्पदस्य
प्राप्ते रसेऽप्यभिलषामि न रङ्गधामन् ! ॥ २ ॥

வேதநூல்பிராயம்நூறு மனிசர்தாம்புகுவரேலும்,
பாதியுமுறங்கிப்போகும் நின்றதில் பதினையாண்டு,
பேதைபாலகனதாகும் பிணிபசிமூப்புத்துனபம்,
ஆதரால்பிறவிவேண்டேனரங்கமாநகருளானே!

वेदोक्तमब्दशतमायुरवाप्य चापि
निद्रीयतेऽर्धमथ पञ्चदशावशिष्टे ।
कैशोर्यबाल्यपरमाधिजराबुभुक्षाः
तस्मान्न जन्म वरये भुवि रङ्गधामन् ! ॥ ३ ॥

மொய்த்தவல்வினையுள் நின்றுமூன்றெழுத்
துடையபேரால்,
கத்திரபந்துமன்றே பராங்கதிகண்டுகொண்டான்,
இத்தனையடியரானார்க் கிரங்கும்நம்மரங்கனாய,
பித்தனைப் பெற்றுமந்தோ பிறவியுள் பிணங்குமாறே. 4.

नाम्नाक्षरत्रयवता ननु पापकर्मा
स क्षत्रबन्धुरभजत् परमां गतिं प्राक् ।
इत्थं प्रपन्नसुलभे भुवि रङ्गभर्त्तृ
सत्यप्यहो विलुठनं जठरे जनन्याः ॥ ४ ॥

பெண்டிரால் சுகங்களுய்ப்பான் பெரியதோரிடும்பை
பூண்டு,
உண்டிராக்கிடக்கும்போது உடலுக்கேகரைந்துநைந்து,
தண்டுழாய்மாலைமார்பன் தமர்களாய்ப்பாடியாடி,
தொண்டுபூண்டமுதமுண்ணாத்தொழும்பர்
சோறுகக்குமாறே. 5

नारीसुखाय ननु संश्रितपारतन्त्र्याः
स्वार्थाय खिन्नमथिताः निशि भुक्तसुप्ताः ।
भक्त्या तुलस्युरसि नो कृतगीतनृत्ताः
*हित्वामृतं बत ! कदन्नमदन्ति मूढाः ॥ ५ ॥

மறம்சுவர்மதிளெடுத்து மறுமைக்கேவெறுமை பூண்டு,
புறம்சுவரோட்டைமாடம் புரளும்போதறிய மாட்டீர்,
அறம்சுவராகிநின்ற வரங்கனார்க்காட்செய்யாதே,
புறம்சுவர்கோலஞ்சேய்து புள்கவ்வக்கிடக்கின்றீரே. 6

मूढा ! न वित्थ विमुखाः परलोकसौख्ये
यूयं सरंध्रतनुकुड्यनिपातवेलाम् ।
धर्मस्य मूलमिह रङ्गिणमप्रपद्य
बाह्यं हि वर्ष्म परिपुष्यथ गृध्रभक्ष्यम् ॥ ६ ॥

புலையறமாகிநின்ற புத்தொடுசமணமெல்லாம்,
கலையறக்கற்றமாந்தர் காண்பரோகேட்பரோ தாம்,
தலையறுப்புண்டும்சாவேன் சத்தியங்காண்மின் ஐயா,
சிலையினாலிலங்கைசெற்ற தேவனேதேவனாவான். 7

अस्पर्शनीयजिनबुद्धमतादिधर्मान्
श्रोष्यन्ति किं बुधजना उत लक्षयेयुः ।
छित्वा म्रियेऽपि शिर आर्यक पश्य सत्यं
देवस्स एव धनुषा जितलङ्क एकः ॥ ७ ॥

வெறுப்பொடுசமணர்முண்டர் விதியில் சாக்கியர்கள், நின்பால்
பொறுப்பரியனகள்பேசில் போவதேநோயதாகி,
குறிப்பெனக்கடையுமாகில் கூடுமேல் தலையை ஆங்கே
அறுப்பதேகருமங்கண்டா யரங்கமாநகருளானே.! 8

द्वेषेण भाग्यरहिताः जिनबौद्धशैवाः
त्वां दूषयन्ति यदि मृत्युकरोस्तु रोगः ।
शक्येत लक्ष्यमपि सेत्स्यति चेत्तदेषां
मूर्ध्नां निकृत्तिरपि कर्म हि रङ्गधामन् ॥ ८ ॥

மற்றுமோர்தெய்வமுண்டோ மதியிலாமானிடர்காள்
உற்றபோதன்றிநீங்க ளொருவனென்றுணரமாட்டீர்,
அற்றமேலொன்றறியீ ரவனல்லால்தெய்வமில்லை,
கற்றினம்மேய்த்தவெந்தை கழலிணைபணிமினீரே.

अप्यस्ति दैवमितरत् मतिहीनमर्त्याः !
नावेथ हन्त तमनापदि नाथमेकम् ।
गुह्यं न वित्थ न ततोधिकमस्ति दैवं
वत्साभिरक्षकविभोः चरणौ भजध्वम् ॥ ९ ॥

நாட்டினான்தெய்வமெங்கும் நல்லதோரருள் தன்னாலே,
காட்டினான் திருவரங்க முய்பவர்க்குய்யும்வண்ணம்,
கேட்டிரேநம்பிமீர்காள் கெருடவாகனனும்நிற்க,
சேட்டைதன்மடியகத்துச் செல்வம்பார்த்திருக்கின்றீரே.

संस्थाप्य दैवमभितः कृपया स्वरङ्गं
जीवातवे भुवि जिजीविषतां प्रदर्श्य ।
श्रृण्वन्तु सन्त इह तिष्ठति तार्क्ष्यवाहे
ज्येष्ठाङ्कतस्स्थ कथमर्थमपेक्षमाणाः ॥ १० ॥

ஒருவில்லாலோங்குமுந்நீ ரடைவித்துலகங்களுய்ய,
செருவிலேயரக்கர்கோனைச் செற்றநம்சேவகனார்,
மருவியபெரியகோயில் மதிள்திருவரங்கமென்னா,
கருவிலேதிருவிலாதீர் காலத்தைக்கழிக்கின்றீரே. 11

अब्धिं निबध्य धनुषा जगतां हिताय
रक्षःपतिं हतवतो युधि रक्षकस्य ।
आवासरङ्गमवरुद्धमकीर्तयन्तः
गर्भश्रिया विरहिताः क्षिपतेह कालम् ॥ ११ ॥

நமனும் முற்கலனும்பேச நரகில்நின்றார்கள்கேட்க,
நரகமேசுவர்க்கமாகும் நாமங்களுடையநம்பி,
அவனதூரரங்கமென்னாது அயர்த்துவீழ்ந்தழியமாந்தர்,
கவலையுள் படுகின்றாரென் றதனுக்கேகவல்கின்றேனே.

आकर्णिते नरकिभिः यममुद्गलोक्ते
यन्नामनि स्वयमभून्निरयोऽपि नाकः ।
तद्धाम रङ्गमविकीर्त्य निपत्य मर्त्याः
मज्जन्ति शोकजलधाविति मे विषादः ॥ १२ ॥

எறியுநீர்வெறிகொள்வேலை மாநிலத்துயிர்களெல்லாம்,
வெறிகொள்பூந்துளவமாலை விண்ணவர்கோனையேத்த,
அறிவிலாமனிதரெல்லா மரங்கமென்றழைப்பராகில்,
பொறியில்வாழ்நரகமெல்லாம் புல்லெழுந்தொழியு
மன்றே. 13

सिन्धूर्मिगन्धितटसीमितभूमिजाताः
अर्चन्ति वासितुलसीस्रजमीशमेव ।
नाथन्ति रंगमिहचेन्मतिहीनमर्त्याः
नश्येत्तदा नरक एव तृणोदयेन ॥ १३ ॥

வண்டினமுரலும்சோலை மயிலினமாலுசோலை,
கொண்டல்மீதண்வும்சோலை குயிலினம்கூவும்சோலை,
அண்டர்கோனமரும்சோலை அணிதிருவரங்கமென்னா,
மிண்டர்பாய்ந்துண்ணும்சோற்றை விலக்கிநாய்க்கிடு
மினீரே.

गुञ्जन्मधूकशिखिनृत्तसुजातगुल्मं
अभ्रंलिहाग्रपिकगानसुसेव्यगुल्मम् ।
नाथस्य गुल्ममिति रङ्गमकीर्तयद्भिः
उत्पत्य भुक्तमपहृत्य शुने प्रदध्वम् ॥ १४ ॥

மெய்யர்க்கேமெய்யனாகும் விதியிலாவென்னைப்போல,
பொய்யர்க்கேபொய்யனாகும் புட்கொடியுடைய
கோமான்,
உய்யப்போமுணர்வினார்கட் கொருவனென்றுணர்ந்த
பின்னை,
ஐயப்பாடறுத்துத்தோன்று மழகனாரரங்கமன்றே. 15

सत्यस्य सत्यमगतेरनृतस्य मद्वत्
सत्येतरं विहगकेतनमीश्वरं तम् ।
जीवातुमेकमवधारितवद्भ्य इन्धे
रङ्गस्तदीयपदमित्यपहाय शङ्काम् ॥ १५ ॥

சூதனாய்க்கள்வனாகித் தூர்த்தரோடிசைந்தகாலம்,
மாதரார்கயல்கணென்னும் வலையுள்பட்டழுந்துவேனை,
போதரேயென்றுசொல்லிப் புந்தியில்புகுந்து, தன்பால்
ஆதரம்பெருகவைத்த வழகனாரரங்கமன்றே. 16

चोरं प्रतारणपरं कृतधूर्तसङ्गं
मां कामिनीनयनजालविलग्नमग्नम् ।
मा गा इति स्वयमुपेत्य हृदि स्वभक्तिं
सौम्यस्य वर्धितवतो वसतिर्हि रङ्गः ॥ १६ ॥

விரும்பிநின்றேத்தமாட்டேன்விதியிலேன்
மதியொன்றில்லை,
இரும்புபோல்வலியநெஞ்சமிறையிறையுருகும்வண்ணம்,
சுரும்பமர்சோலைசூழ்ந்த அரங்கமாகோயில்கொண்ட,
கரும்பினைக்கண்டுகொண்டென்கண்ணிணை
களிக்குமாறே. 17

नाहं स्तुवे प्रणयतो विगतिर्विमूढः
चेतो ममायसदृढं द्रवयन्तमीषत् ।
भृङ्गश्रिगुल्मवृतरङ्गपुरालयस्थं
ईशानमिक्षुमधुरं सुखदं दृशोर्मे ॥ १७ ॥

இனிதிரைத்திவலைமோத வெறியும்தண்பரவைமீதே,
தனிகிடந்தரசுசெய்யும் தாமரைக்கண்ணனெம்மான்,
கனியிருந்தனையசெவ்வாய் கண்ணனைக்கண்டகண்கள்,
பனியரும்புதிருமாலோ என்செய்கேன்பாவியேனே. 18

कीर्यत्पृषन्मधुरवीचिमहाब्धिमध्ये
एकाधिपत्यरसिकं प्रभुमम्बुजाक्षम् ।
दृष्ट्वा दृशौ मम सुपक्वफलारुणोष्ठं
कृष्णं करोमि किमहं किरतोऽश्रुबिन्दून् ॥ १८ ॥

குடதிசை முடியைவைத்துக் குணதிசைபாதம்நீட்டி,
வடதிசைபின்புகாட்டித் தென்திசையிலங்கைநோக்கி,
கடல்நிறக்கடவுளெந்தை யரவணைத்துயிலுமாகண்டு,
உடலெனக்குருகுமாலோ என்செய்கேனுலகத்தீரே. 19

प्राच्यां निधाय चरणौ मकुटं प्रतीच्यां
पृष्ठाहितोत्तरं अवेक्षितदक्षिणाशम् ।
अम्भोधिकल्पं अवलोक्य भुजङ्गतल्पं
नाथं वपुर्द्रवति मे किमहं करोमि ॥ १९ ॥

பாயுநீரரங்கந்தன்னுள் பாம்பணைப்பள்ளிகொண்ட,
மாயனார் திருநன்மார்பும் மரகதவுருவும்தோளும்,
தூயதாமரைக்கண்களும் துவரிதழ்ப்பவளவாயும்,
ஆயசீர்முடியும்தேசு மடியரோர்க்ககலலாமே. 20

रङ्गे प्रवाहिसलिलेऽहिशयस्य वक्षः
मायाविनो मरकताकृतिः अंसयुग्मम् ।
शुद्धाम्बुजाक्ष्यरुणपल्लवविद्रुमोष्ठौ
तेजश्शिखाप्यपसरन्तु कथं हृदो नः ॥ २० ॥

பணிவினால்மனமதொன்றிப் பவளவாயரங்கனார்க்கு,
துணிவினால்வாழமாட்டாத் தொல்லைநெஞ்சேநீ
சொல்லாய்,
அணியனார்செம்பொனாய அருவரையனையகோயில்,
மணியனார்கிடந்தவாற்றை மனத்தினால் நினைக்கலாமே.

ब्रूहि प्रवालमुखरङ्गपुरेशदास्ये
आसक्तिहीन हतचित्त मदीय मत्त ।
सन्तप्तहेमगिरिसद्युतिमन्दिरस्य
चिन्त्याऽन्ततो वरमणेः शयनीयरीतिः ॥ २१ ॥

பேசிற்றேபேசலல்லால் பெருமையொன்றுணரலாகாது,
ஆசற்றார்தங்கட்கல்லா லறியலாவானுமல்லன்,
மாசற்றார்மனத்துளானை வணங்கிநாமிருப்பதல்லால்,
பேசத்தானாவதுண்டோ பேதைநெஞ்சே நீசொல்லாய். 22

न ज्ञायतेऽस्य महिमोच्यत उक्तमेव
ज्ञेयेतरं तमितरैरिह वीतदोषात् ।
नत्वा परं विमलचित्तगतं स्थितेर्नः
श्लाघ्यं किमस्ति वद मूढमनस्त्वमेव ॥ २२ ॥

கங்கையிற்புனிதமாய காவிரிநடுவுபாட்டு,
பொங்குநீர்பரந்துபாயும் பூம்பொழிலரங்கந்தன்னுள்,
எங்கள்மாலிறைவனீசன் கிடந்ததோர் கிடக்கைகண்டும்,
எங்ஙனம்மறந்துவாழ்கே னேழையேனேழையேனே. 23

गङ्गातिशायिपरिशुद्धमरुद्वृधायाः
मध्ये वहत्सलिलपुष्पितगुल्मरङ्गे ।
अस्मत्प्रभोः शयनमेष जनो निरीक्ष्य
विस्मृत्य जीवतु कथं बत दीनदीनः ॥ २३ ॥

வெள்ளநீர்பரந்துபாயும் விரிபொழிலரங்கந்தன்னுள்,
கள்வனார் கிடந்தவாறும் கமலநன் முகமும்கண்டும்,
உள்ளமேவலியைபோலு மொருவனென்றுணர
மாட்டாய்,
கள்ளமேகாதல்செய்துன் கள்ளத்தேகழிக்கின்றாயே. 24

रङ्गे सुमोपवनशालिनि वाहितोये
चोरस्य तस्य शयितं वदनांबुजं च ।
दृष्ट्वापि निष्ठुरमनस्तमवेषि नैकं
मिथ्यानुरागनिरतो वलसे ह्यसत्ये ॥ २४ ॥

குளித்துமூன்றனலையோம்பும் குறிகொளந்தண்மை தன்னை,
ஒளித்திட்டேனென்கணில்லை நின்கணும்பத்தனல்லேன்,
களிப்பதென்கொண்டுநம்பீ கடல்வண்ணகதறுகின்றேன்,
அளித்தெனக்கருள்செய்கண்டாய் அரங்கமாநகருளானே.

स्नात्वा त्रिवह्निचयनार्हसुचिह्नवैप्रयं
निह्नुत्य नात्मनि रतो न तवापि भक्तः ।
नन्दाम्यहो जलधिवर्ण ! विभो कथं वा
क्रन्दाम्यनुग्रहमतः कुरु रङ्गधामन् ॥ २५ ॥

போதெல்லாம்போதுகொண்டுன்பொன்னடிபுனைய
மாட்டேன்,
தீதிலாமொழிகள் கொண்டுன்திருக்குணம்செப்ப
மாட்டேன்,
காதலால்நெஞ்சமன்பு கலந்திலேன துதன்னாலே,
ஏதிலேனரங்கர்க்கு என்செய்வான் தோன்றினேனே. 26

पुष्पैर्नवार्चयमहं तव पादयुग्मं
वाचाऽथवा सुभगया न गुणानगायम् ।
प्रेम्णा न वा प्रणयभावभरं मनो मे
किं जन्मना किमपि यत्तव नास्मि रंगिन् ॥ २६ ॥

குரங்குகள்மலையைநூக்கக் குளித்துத்தாம்
புரண்டிட்டோடி,
தரங்கநீரடைக்கலுற்ற சலமிலாவணிலம்போலேன்,
மரங்கள்போல்வலியநெஞ்ச வஞ்சனேன்நெஞ்சுதன்னால்,
அரங்கனார்க்காட்செய்யாதே அளியத்தேனயர்க்
கின்றேனே. 27

सेतुं कपिष्वकपटः कलयत्सु शैलैः
साहाय्यकृच्चमरपुच्छ इवापि नो सन् ।
हा दारुदारुणमनाः कितवोऽन्तरङ्गात्
दूयेऽद्य दास्यमदधत्त्विह रङ्गधाम्नः ॥ २७ ॥

உம்பராலறியலாகா வொளியுளார் ஆனைக்காகி,
செம்புலாலுண்டுவாழும் முதலைமேல்சீறிவந்தார்,
நம்பரமாயதுண்டே நாய்களோம் சிறுமையோரா,
எம்பிராற்காட்செய்யாதே யென்செய்வான்
தோன்றினேனே. 28

नाकौकसामनवधार्यगतेर्गजाय
नक्रे क्रुधं कृतवतो नवमांसभक्षे ।
स्वार्थे स्थितश्शुनकवत् कथमुत्तमस्य
सेवामहं भगवतोऽदधदस्मि जातः ॥ २८ ॥

ஊரிலேன்காணியில்லை உறவுமற்றொருவரில்லை,
பாரில்நின்பாதமூலம் பற்றிலேன்பரமமூர்த்தி,
காரொளிவண்ணனே கண்ணனே கதறுகின்றேன்,
ஆருளர்களைகணம்மா அரங்கமாநகருளானே. 29

ग्रामो न भूमिरपि मे न च कोऽपि बन्धुः
पादौ न वा परम ! संश्रितवांस्तवाहम् ।
क्रन्दामि कृष्ण ! नवमेघनिकायकाय !
गोप्ता प्रभो क इतरो मम रङ्गधामन् ॥ २९ ॥

மனத்திலோர் தூய்மையில்லை வாயிலோரின்சொலில்லை,
சினத்திணல்செற்றம்நோக்கித் தீவிளிவிளிவன்வாளா,
புனத்துழாய்மாலையானே பொன்னிசூழ்திருவரங்கா,
எனக்கினிக்கதியென்சொல்லா யென்னை
யாளுடையகோவே. 30

शुद्धिर्न चेतसि मुखे मधुरं वचो वा
वक्ष्यामि रूक्षमवलोक्य दहन् रुषेव ।
हेमापगावलितरङ्गपते ! तुलस्याः
मालां दधान वद का हि गतिर्ममेश ! ॥ ३० ॥

தவத்துளார்தம்மிலல்லேன் தனம்படைத்தாரிலல்லேன்,
உவர்த்தநீர்போலவென்ற னுற்றவர்க்கொன்று
மல்லேன்,
துவர்த்தசெவ்வாயினூர்க்கே துவக்கறத் துரிசனானேன்,
அவத்தமேபிறவிதந்தா யரங்கமாநகருளானே. 31

नाहं तपस्विषु न वा धनिकेषु कश्चित्
क्षारांबुवन्न निजबन्धुजनोपयुक्तः ।
तांबूलरक्तवदनासु वधूष्वहो मे
सक्तस्य जन्म विफलं किल रङ्गधामन् ॥ ३१ ॥

ஆர்த்துவண்டலம்பும்சோலை யணிதிருவரங்
கந்தன்னுள்,
கார்த்திரளனையமேனிக் கண்ணனே உன்னைக்காணும்,
மார்க்கமொன்றறியமாட்டா மனிசரில்துரிசனாய,
மூர்க்கனேன்வந்துநின்றேன் மூர்க்கனேன்
மூர்க்கனேனே. 32

माद्यन्मधुव्रतनदद्वनरम्यरंगे
त्वां वीक्षितुं नवपयोदनिकायकायम् ।
मार्गं कमप्यनवगत्य नरेषु नीचः
मूर्खो जनोऽयमिह तिष्ठति मूर्खमूर्खः ॥ ३२ ॥

மெய்யெல்லாம்போகவிட்டு விரிகுழலாரில்பட்டு,
பொய்யெல்லாம்பொதிந்துகொண்டபோட்கனேன்வந்து
நின்றேன்,
ஐயனே அரங்கனே உன்னருளென்னுமாசைதன்னுல்,
பொய்யனேன்வந்துநின்றேன்பொய்யனேன்
பொய்யனேனே. 33

सत्यं निरस्य सततं निरतस्सुकेशी-
च्वेषोऽनृतैकनिलयः किल नीचनीचः ।
रंगिन् ! प्रभो ! तव कृपां प्रतिलब्धुकामः
तिष्ठाम्यसत्य इत एत्य महानसत्यः ॥ ३३ ॥

உள்ளத்தேயுறையும்மாலை உள்ளுவானுணர்
வொன்றில்லா,
கள்ளத்தேனும்தொண்டாய்த் தொண்டுக்கேகோலம்
பூண்டேன்,
உள்ளுவாருள்ளிற்றெல்லா முடனிருந்தறி தியென்று,
வெள்கிப்போயென்னுள்ளேநான் விலவறச்
சிரித்திட்டேனே. 34

अन्तर्वसन्तमविदन्नखिलस्य जन्तोः
मिथ्यैव दास्यनिरतः कृतदास्यवेषः ।
अन्तर्विचिन्तितमशेषमवेषि नृणां
इत्यन्तरेव विहसामि कटिं त्रुटन्मे ॥ ३४ ॥

தாவியன் றுலகமெல்லாம் தலைவிளாக்கொண்ட
வெந்தாய்,
சேவியேனுன்னையல்லால் சிக்கெனச்செங்கண்மாலே,
ஆவியே அமுதே என்ற ளுருயிரனையவெந்தாய்,
பாவியேனுன்னையல்லால் பாவியேன்பாவியேனே. 35

उत्पत्य लोकमखिलं त्वममा ममेश
त्वामन्तरेण भगवन्न भजेयमन्यम् ।
प्राणायितामृत ममासुसमाननाथ
पापोऽप्यहं त्वदितरं न हि भावयेयम् ॥ ३५ ॥

மழைக்கன்றுவரைமுனேந்தும் மைந்தனே மதுரவாறே
உழைக்கன்றேபோலநோக்க முடையவர்வலையுள்பட்டு,
உழைக்கின்றேற்கென்னைநோக்காதொழிவதே,
உன்னையன்றே
அழைக்கின்றேன் ஆதிமூர்த்தி அரங்கமாநகருளானே.

वर्षारुधद्रिधर नन्दन माधुरीमन्
पाशैरहं हरिणशावदृशां निबद्धः ।
मग्नो ह्रयामि तव सेवकदृष्टिदूरः
त्वामादिपूरुष विलोकय रङ्गधामन् ॥ ३६ ॥

தெளிவிலாக்கலங்கல்நீர்சூழ் திருவரங்கத்
துள்ளோங்கும்,
ஒளியுளார்தாமேயன்றே தந்தையும்தாயுமாவார்,
எளியரோருளுமன்றே யென்திறத்தெம்பிரானுர்,
அளியன்நம்பையல்என்னுர் அம்மவோ கொடியவாறே.

अत्राप्रसन्नकलुषांबुपरीतरङ्गे
इन्धान एव भुवनस्य पिता च माता ।
सौलभ्यतश्च दययैव कथं प्रभुर्मां
दीनो मदीय इति नाभिदधाति सद्यः ॥ ३७ ॥

மேம்பொருள்போகவிட்டு மெய்ம்மையைமிகவுணர்ந்து,
ஆம்பரிசறிந்துகொண்டு ஐம்புலனகத்தடக்கி,
காம்பறத்தலைசிரைத்துன் கடைத்தலையிருந்து, வாழும்
சோம்பரைஉகத்திபோலும் சூழ்புனலரங்கத்தானே. 38

अर्थं विधूय परमार्थमुपेयमेकं
विज्ञाय पञ्च करणानि नियम्य केशम् ।
उन्मूल्य तावकगृहाग्रगताः प्रियास्ते
एतेऽलसाः जलपरीवृतरङ्गधामन् ॥ ३८ ॥

அடிமையில்குடிமையில்லா அயல் சதுப்பேதிமாரில்,
குடிமையில்கடைமைபட்ட குக்கரில்பிறப்பரேலும்,
முடியினில்துளபம்வைத்தாய் மொய்கழற்கன்பு
செய்யும்,
அடியரையுகத்திபோலு மரங்கமாநசருளானே. 39

त्वद्दास्यहीनचतुरागमविद्द्विजेभ्यः
हीने कुले समुदिता उपजीविनां वा ।
त्वत्पादपूजनरतास्तुलसीद्धमौले !
दासा ध्रुवं प्रियतमास्तव रङ्गधामन् ॥ ३९ ॥

திருமறுமார்வ நின்னைச் சிந்தையுள் திகழவைத்து,
மருவியமனத்தராகில் மாநிலத்துயிர்களெல்லாம்,
வெருவுறக்கொன்றுசுட்டிட்டீட்டியவினையரேலும்,
அருவினைப்பயன துய்யார் அரங்கமாகருளானே. 40

श्रीवत्सवक्ष इह ये त्वयि बद्धभावाः
त्वां चिन्तयन्ति भुवि यद्यपि सर्वजन्तून् ।
दग्ध्वा निहत्य विजुगुप्सितवृत्तयस्ते
भुञ्जन्ति पापफलमेव न रङ्गधामन् ॥ ४० ॥

வானுளார றியலாகா வானவா என்பராகில்,
தேனுலாந்துளபமாலைச் சென்னியா யென்பாரகில்,
ஊனமாயினகள்செய்யு மூனகாரர்களேலும்,
போனகம்செய்தசேடம் தருவரேல்புனிதமன்றே. 41

दैवैरवेद्य भगवन्निति देवदेव
स्विद्यन्मरन्दतुलसीलसदुत्तमाङ्ग ।
हीना गृणन्ति यदि गर्हितवृत्तयोऽपि
दत्तः पुनाति ननु तैरिह भुक्तशेषः ॥ ४१ ॥

பழுதிலாவொழுகலாற்றுப் பலசதுப்பேதிமார்கள்,
இழிகுலத்தவர்களேலு மெம்மடியார்களாகில்,
தொழுமினீர்கொடுமின்கொள்மி னென்றுநின்னோடு
மொக்க,
வழிபடவருளினாய்போல் மதிள்திருவரங்கத்தானே. 42

भो निर्मलाः सुचरिताः चतुरागमज्ञाः
हीने कुलेऽपि जनिता यदि मां प्रपन्नाः ।
तेभ्यो नमस्कुरुत वित्थ च दत्त चेति
तानत्र सेव्ययसि नस्स्वमिवैव रङ्गिन् ॥ ४२ ॥

அமரவோரங்கமாறும் வேதமோர்நான்குமோதி,
தமர்களில்தலைவராய சாதியந்தணர்களேலும்,
நுமர்களைப்பழிப்பராகில் நொடிப்பதோரளவில், ஆங்கே
அவர்கள் தாம்புலையர்போலு மரங்கமாநகருளானே.43

वेदान् षडङ्गसहितान् चतुरोप्यधीत्य
प्रेष्ठा इह द्विजवरा विबुधाग्रगण्याः ।
निन्दन्ति तावकजनान् यदि तत्क्षणेन
ते तत्र पञ्चमसमाः किल रङ्गधामन् ॥ ४३ ॥

பெண்ணுலாம்சடையினானும் பிரமனுமுன்னைக்
காண்பான்,
எண்ணிலாவூழியழி தவஞ்செய்தார்வெள்கிநிற்ப,
விண்ணுளார்வியப்பவந்து ஆனைக்கன்றருளையீந்த
கண்ணறா, உன்னையன்றோ களைகணைக் கருதுமாறே.

ब्रह्मा शिवश्च समवेक्षितुमक्षमौ त्वां
दीर्घेण कल्पमहता तपसा विलक्षौ ।
हस्तिन्यनुग्रहपरो दिविषत्सु पश्यत्सु
आश्चर्यतस्त्वमिह गोप्तृतयासि चिन्त्यः ॥ ४४ ॥

வளவெழும்தவளமாட மதுரைமாநகரந்தன்னுள்,
கவளமால்யானைகொன்ற கண்ணனை அரங்கமாலை,
துளவத்தொண்டாயதொல்சீர்த்தொண்டரடிப்பொடி
சொல்,
இளையபுன்கவிதையேலு மெம்பிராற்கினியவாறே. 45

திருமாலை நிறைவுற்றது.

धौतोच्चसौधमथुरापुरि कृष्णरूपं
श्रीरंगिणं निहतवन्तमिभं प्रभिन्नम् ।
स्तोतुं कृताद्य तुलसीदलदास्यकारि -
भक्तांघ्रिरेणुकविता प्रभवे प्रिया स्यात् ॥ ४९ ॥

॥ श्रीमाला संपूर्णा ॥

தொண்டரடிப் பொடியாழ்வார் அருளிச்செய்த

திருப்பள்ளி எழுச்சி

தனியன்கள்

॥ भक्ताङ्घ्रिरेणोः श्रीप्रबोधिनीप्रबन्धस्य मुखपद्ये ॥

तमेव मत्वा परवासुदेवं
रङ्गेशयं राजवदर्हणीयम् ।
प्राबोधिकीं योऽकृत सूक्तिमालां
भक्ताङ्घ्रिरेणुं भगवन्तमीडे ॥

மண்டங்குடி என்பர் மாமறையோர் மன்னியசீர்
தொண்டரடிப் பொடி தொன்னகரம் – வண்டு
திணர்த்தவயல் தென்னரங்கத்தம்மானைப் பள்ளி
உணர்த்தும் பிரானுதித்த ஊர்.

*मण्डङ्गुडिं वेदविदो वदन्ति
यशस्विनो जन्मभुवं महान्तः ।
घुष्टालिकेदारकरङ्गनाथ-
प्रबोधकस्यास्य सदङ्घ्रिरेणोः ॥

---

* इदं विवर्तनं विल्लूर् नडादूर् श्री करुणाकरेण कृतम् ।

திருப்பள்ளியெழுச்சி

॥ श्रीप्रबोधिनी ॥

கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தணைந்தான்
கனையிருளகன்றது காலையம் பொழுதாய்
மதுவிரிந்தொழுகின மாமலரெல்லாம்
வானவரரசர்கள் வந்து வந்தீண்டி
எதிர் திசை நிறைந்தனர் இவரொடும் புகுந்த
இருங்களிற்றீட்டமும் பிடியொடு முரசும்
அதிர்தலிலலைகடல் போன்றுளதெங்கும்
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே. 1

पतङ्गस्समाश्लिष्टपूर्वाद्रिशृङ्गः
तमिस्त्रापयाता प्रभातं विभाति ।
विकस्य क्षरन्ति प्रसूनानि मद्यं
सुवर्गौकसो भूमिपालास्समेत्य ॥

पुरस्ते मिलन्त्येभिरत्रोपनीताः
करेणुद्विपानां च यूथा मृदङ्गाः ।
नदन्तोऽभितो वीचिमालीव दृष्टाः
प्रबुध्य प्रसीद प्रभो रङ्गनाथ ॥ १ ॥

கொழுங்கொடி முல்லையின் கொழுமலரணவிக்
கூர்ந்தது குணதிசை மாருதமிதுவோ
எழுந்தன மலரணைப் பள்ளிகொள்ளன்னம்
ஈன்பனி நனைந்த தமிருஞ் சிறகுதறி
விழுங்கிய முதலையின் பிலம்புரை பேழ்வாய்
வெள்ளெயிறுற அதன் விடத்தினுக்கனுங்கி
அழுங்கி யவானையின் அருந்துயர் கெடுத்த
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே. 2

प्रसंरूढमल्लीलताफुल्लपुष्पाण्यु -
पश्लिष्यपूर्वानिलो वाति मन्दम् ।
समुत्थाय पुष्पे शयानाश्च हंसाः
हिमार्द्रान्स्वपक्षान्विधूयोत्पतन्ति ॥

गिलद्ग्राहदर्याननश्वेतदन्तैः
गृहीतस्य कामं विषेणार्दितस्य ।
रुजा विक्लबस्य द्विपस्यार्तिहारिन्
प्रबुध्य प्रसीद प्रभो रङ्गनाथ ॥ २ ॥

சுடரொளி பரந்தன சூழ்திசையெல்லாம்
துன்னிய தாரகை மின்னொளி சுருங்கிப்
படரொளி பசுத்தனன் பனி மதியிவனோ
பாயிருளகன்றது பைம்பொழிற்கமுகின்
மடலிடைக்கீறி வண்பாளைகள் நாற
வைகறை கூர்ந்தது மாருத மிதுவோ
அடலொளி திகழ்தரு திகிரியந்த தடக்கை
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே. 3

त्विषोऽर्कस्य सर्वा दिशो व्याप्नुवन्ति
स तारागणस्संकुचत्यात्मकान्तिम् ।
हिमांशुर्विनष्टप्रभोऽसावपेतं
तमो वृक्षषण्डेषु पूगद्रुमाणम् ॥

दलानां प्रविश्यान्तरालं प्रवालैः
सुगन्धिः प्रभाते सुखं वाति वातः ।
सुविक्रान्तविद्योतिचक्रेद्धपाणे
प्रबुध्य प्रसीद प्रभो रङ्गनाथ ॥ ३ ॥

மேட்டிள மேதிகள் தளைவிடுமாயர்கள்
வேய்ங் குழலோசையும் விடை மணிக்குரலும்
ஈட்டிய இசை திசை பரந்தன வயலுள்
இரிந்தன சுரும்பினம் இலங்கையர் குலத்தை
வாட்டிய வரிசிலை வானவரேறே!
மாமுனி வேள்வியைக் காத்து, அவபிரதம்
ஆட்டிய அடுதிறல் அயோத்தியெம்மரசே!
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே. 4

बृहत्कासरीचारिणां वल्लवानां
मुरल्या रवैः किंकिणीनां वृषाणाम् ॥
दिशो यान्ति गीतानि कैदारिकायां
मधूका विसर्पन्ति लङ्कासुरघ्नम् ॥

धनुश्चारु बिभ्राण देवर्षभर्षेः
क्रतुं पालयित्वा तमाप्लाव्य चान्ते ।
महावीर्यशालिन्नयोध्यापते भोः
प्रबुध्य प्रसीद प्रभो रङ्गनाथ ॥ ४ ॥

புலம்பின புட்களும் பூம்பொழில்களின் வாய்
போயிற்றுக் கங்குல் புகுந்தது புலரி
கலந்தது குணதிசைக் கனைகடலரவம்
களிவண்டுமிழற்றிய கலம்பகம் புனைந்த
அலங்கலந்தொடையல்கொண்டடியிணை பணிவான்
அமரர்கள் புகுந்தனர் ஆதலிலம்மா
இலங்கையர் கோன் வழிபாடு செய் கோயில்
எம்பெருமான்! பள்ளியெழுந்தருளாயே. 5

विहंगा नदन्ति प्रफुल्लद्रुमेभ्यः
गता रात्रिरायातमद्य प्रभातम्
समाकर्ण्यते पूर्वपाथोधिघोषः
समोदालिनादप्रसूनैः प्रणीतम् ॥

शुभं माल्यमादाय नन्तुं पदं ते
समायान्ति देवा इतस्तेन नाथ ! ।
सुलंकाधिपाराधिते सद्विमाने
स्थितास्मत्प्रभो भोः प्रबुध्य प्रसीद ॥ ५ ॥

இரவியர் மணி நெடுந்தேரொடு மிவரோ
இறையவர் பதினொரு விடையருமிவரோ
மருவிய மயிலினனறுமுகனிவனோ
மருதரும் வசுக்களும் வந்து வந்தீண்டி
புரவியோடாடலும் பாடலும் தேரும்
குமரதண்டம் புகுந்தீண்டிய வெள்ளம்
அருவரையனைய நின்கோயிலின் முன்னிவரோ
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே. 6

अमी किंकिणीस्यन्दनेष्वर्यमाणः
वृषोढा इमे रुद्रदेवा दशैकः ।
मयूराधिविष्टषडास्योऽयमास्ते
वसूनां मरुद्देवतानां समूहाः ॥

तुरङ्गैश्च नृत्तैश्च गीतै रथाद्यैः
कुमारस्य सैन्यप्रवाहं विगाढाः ।
महाशैलतुल्यालयाग्रे स्थितास्ते
प्रबुध्य प्रसीद प्रभो रङ्गनाथ ॥ ६ ॥

அந்தரத்தமரர்கள் கூட்டங்களிவையோ
அருந்தவ முனிவரும் மருதரும் இவரோ
இந்திரனானையும் தானும் வந்திவனே
எம்பெருமானுன கோயிலின் வாசல்
சுந்தரர் நெருக்க விச்சாதரர் நூக்க
இயக்கரும் மயங்கினர் திருவடி தொழுவான்
அந்தரம் பாரிடமில்லை மற்றிதுவோ
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே. 7

इमे देवतानां गणा अन्तरिक्षे
तपस्यन्-मुनीन्द्रा मरुद्देवताश्च ।
सहैरावतेनागतोऽयं सुरेन्द्रः
त्वदीयालयस्याग्रतो लोकनाथ ॥

सुविद्याधराक्रान्तगन्धर्वपिष्टाः
विमुह्यन्ति यक्षाः पदं नन्तुकामाः ।
न भूमौ न खे चापि दृष्टोऽवकाशः
प्रबुध्य प्रसीद प्रभो रङ्गनाथ ॥ ७ ॥

வம்பவிழ் வானவர் வாயுறை வழங்க
மாநிதிகபிலை யொண் கண்ணாடி முதலா
எம்பெருமான் படிமைக்கலங் காண்டற்கு
ஏற்பன வாயின கொண்டு நன்முனிவர்
தும்புரு நாரதர் புகுந்தனரிவரோ
தோன்றினன் இரவியும் துலங்கொளி பரப்பி
அம்பர தலத்தில் நின்றகல்கின்றதிருள்போய்
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே. 8

सुगन्धिष्वमर्त्येषु गोग्रासदेषु
श्रियं कामधेनुं प्रभादर्पणादि ।
भवद्विश्वरूपाभिधाराधनार्थं
प्रयुक्तं समादाय सर्वं मुनीन्द्राः ॥

इमौ तुम्बुरुर्नारदश्च प्रविष्टाः
प्रसार्य प्रभां स्वामुदेत्यंशुमाली ।
नभस्तस्तमोऽपैति दूरं ततोऽद्य
प्रबुध्य प्रसीद प्रभो रङ्गनाथ ॥ ८ ॥

ஏதமில் தண்ணுமை எக்கம் மத்தளி
யாழ்குழல் முழவமோடிசை திசை கெழுமி
கீதங்கள் பாடினர் கின்னரர் கெருடர்கள்
கந்தருவரவர் கங்குலுளெல்லாம்
மாதவர் வானவர் சாரணர் இயக்கர்
சித்தரும் 'மயங்கினர் திருவடி தொழுவான்
ஆதலிலவர்க்கு நாளோலக்கமருள
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே. 9

सुभेर्येकतन्त्रीमृदङ्गैश्च वीणा -
मुरल्यादिभिस्सर्वतो नादयित्वा ।
अमी किंनराश्चापि गायन्ति तार्क्ष्याः
सगन्धर्वमुख्या अविच्छिद्य रात्रिम् ॥

सुरास्तापसाश्चारणा यक्षसंघाः
विमुह्यन्ति सिद्धाः पदं नन्तुकामाः ।
ततो वासरानुग्रहं दातुमेभ्यः
प्रबुध्य प्रसीद प्रभो रंगनाथ ॥ ९ ॥

கடிமலர்க் கமலங்கள் மலர்ந்தன இவையோ?
கதிரவன் கனைகடல் முளைத்தனன் இவனோ?
துடியிடையார் சுரிகுழல் பிழிந்துதறித்
துகிலுடுத்தேறினர் சூழ்புனலரங்கா!
தொடையொத்த துளவமும் கூடையும் பொலிந்து
தோன்றியதோள் தொண்டரடிப்பொடியென்னும்
அடியனை, அளியனென்றருளி உன்னடியார்க்கு
ஆட்படுத்தாய்! பள்ளியெழுந்தருளாயே. 10

திருப்பள்ளி எழுச்சி நிறைவுற்றது.

सुगन्धीनि पद्मानि फुल्लान्यमूनि
समुत्थः पतङ्गस्समुद्रात्सघोषात् ।
विपिष्टावधूतालका वेदिमध्याः
सुवेष्ट्योत्तरन्त्यप्परिष्वक्तरङ्गिन् ॥

निबद्धैस्तुलस्या दलैः पुष्पभाण्डैः
परिद्योतितस्कन्धभक्ताङ्घ्रिरेणुम् ।
दयापात्रमित्येव ते भक्तगोष्ठ्याः
विधेयं विधेहि प्रबुध्य प्रसीद ॥ १० ॥

॥ श्रीप्रबोधिनी संपूर्णा ॥

****

॥ श्रीः ॥

ஸ்ரீ மதுரகவி ஆழ்வார் அருளிச்செய்த

கண்ணி நுண் சிறுத்தாம்பு

॥ श्रीमधुरकविदिव्यसूरिविरचितः ग्रन्थिमल्लघुगुणप्रबन्धः ॥

॥ मुखपद्यगाथे ॥

अविदितविषयान्तरश्शठारेः उपनिषदामुपगानमात्रभोगः ।
अपि च गुणवशात्तदेकशेषी मधुरकविर्हृदये ममाविरस्तु ॥

2. வேறொன்றும் நானறியேன் வேதம் தமிழ் செய்த
மாறன் சடகோபன் வண்குருகூர்—ஏறு, எங்கள்
வாழ்வாமென்றேத்தும் மதுரகவியார் எம்மை
ஆள்வார் அவரே அரண்.

*जानामि नान्यत् किल किञ्चनाहं
वेदं घटोद्भूतगिरि प्रदाता ।
मारश्शठारिः कुरुकावृषो नः
जीवातुरित्यादि नुतीर्विधाय ।
आस्ते कविर्यो मधुरः प्रशास्ता
मान्यः सुरक्षा च स एव नोऽस्ति ॥ २ ॥

---

* इदं विल्लूरू नडादूरू श्री करुणाकरेण कृतं विवर्तनम् ।

॥ श्रीः ॥

கண்ணி நுண் சிறுத்தாம்பு

॥ ग्रन्थिमल्लघुगुणः ॥

1. கண்ணி நுண் சிறுத்தாம்பினால், கட்டுண்ணப்
பண்ணிய பெருமாயன், என்னப்பனில்,
நண்ணித் தென்குருகூர்நம்பி என்றக்கால்
அண்ணிக்கும் அமுதூறும் என் நாவுக்கே.

लघिष्ठसग्रन्थिगुणेन मायिनः
प्रभोर्ममम प्रापितबन्धनादपि ।
जपेन नाम्नः कुरुकागुरोरितः
मदीयजिह्वा मधुमत्तरा भवेत् ॥ १ ॥

2. நாவினால் நவிற்று இன்பமெய்தினேன்
மேவினேன் அவன் பொன்னடி மெய்ம்மையே
தேவு மற்றறியேன் குருகூர் நம்பி
பாவின் இன்னிசை பாடித்திரிவனே.

अवापमानन्दमुदीर्य जिह्वया
शुभं तदीयं च पदं यथार्थतः ।
न वेद्मि दैवं कुरुकाप्रभोः परं
चरामि गायन् मधुरा हि तत्कृतीः ॥ २ ॥

3. திரிதந்தாகிலும் தேவபிரானுடைக்
கரிய கோலத்திரு உருக்காண்பன் நான்
பெரிய வண் குருகூர் நகர் நம்பிக்கு ஆள்
உரியனாய் அடியேன் பெற்ற நன்மையே.

तथा चरन् रूपमवेक्षितुं क्षमे
सितेतरं देवपतेः श्रिया युतम् ।
उदारवृत्तेः कुरुकाप्रभोरहं
समासदं श्रेय इदं सुसेवया ॥ ३ ॥

4. நன்மையால் மிக்க நான் மறையாளர்கள்
புன்மையாகக் கருதுவர் ஆதலின்
அன்னையாய் அத்தனாய் என்னை ஆண்டிடும்
தன்மையான் சடகோபன் என் நம்பியே.

समुन्नताः श्रेयसि वेदवित्तमाः
विनिन्दितं विद्युरिमं जनं यतः ।
पितेव मातेव च रक्षकस्ततः
प्रभुर्मदीयश्शठकोप एव सः ॥ ४ ॥

5. நம்பினேன் பிறர் நன் பொருள் தன்னையும்
நம்பினேன்மடவாரையும் முன் எலாம்
செம்பொன் மாடத்திருக் குருகூர் நம்பிக்கு
அன்பனாய் அடியேன் சதிர்த்தேன் இன்றே.

परस्स्वविश्वासपरः पुराऽभवं
विलासिनीः व्यश्वसमेवमेव च ।
सहेमसौधां कुरुकामधिष्ठितं
प्रभुं समाश्रित्य जयामि सांप्रतम् ॥ ५ ॥

6. இன்று தொட்டும் எழுமையும் எம்பிரான்
நின்று தன் புகழ் ஏத்த அருளினன்
குன்ற மாடத்திருக் குருக்கூர் நம்பி
என்றும் என்னை இகழ்விலன் காண்மினே.

इतः परं सप्तसु जन्मसु स्वकं
यशस्स गातुं कृतवाननुग्रहम् ।
बृहद्गृहश्रीकुरुकापुरीप्रभुः
उपेक्षिता मां न कदाऽपि पश्यत ॥ ६ ॥

7. கண்டு கொண்டென்னைக் காரிமாறப்பிரான்
பண்டை வல்வினை பாற்றி அருளினன்
எண்டிசையும் அறிய இயம்புகேன்
ஒண்டமிழ்ச் சடகோபன் அருளையே.

स कारिजो मामवलोक्य पार्श्वतः
ममार्ज सर्वं मम पापसञ्चयम् ।
प्रबोधयन्नष्टदिशोऽपि कीर्तये
शठद्विषो द्राविडगायिनो दयाम् ॥ ७ ॥

8. அருள் கொண்டாடும் அடியவர் இன்புற
அருளினான் அவ்வருமறையின் பொருள்
அருள் கொண்டாயிரம் இன் தமிழ் பாடினான்
அருள் கண்டீர் இவ்வுலகினில் மிக்கதே.

दयां श्रियः पत्युरवाप्य नन्दतां
दद‍ौ मुदे यो निगमार्थसंविदम् ।
सहस्रगाथाः द्रमिडीयभाषया
प्रणेतुरिन्धे करुणा शठद्विषः ॥ ८ ॥

9. மிக்க வேதியர் வேதத்தின் உட்பொருள்
நிற்கப்பாடி என் நெஞ்சுள் நிறுத்தினான்
தக்கசீர்ச் சடகோபன் என் நம்பிக்கு ஆட்
புக்க காதல் அடிமைப் பயனன்றே.

द्विजातिगीतश्रुतिसारसंपदं
न्यधत्त संगीय स मानसे मम ।
यशस्विनो दास्यरुचिश्शठद्विषः
परं फलं किङ्करजीवितस्य नः ॥ ९ ॥

10. பயனன்றாகிலும் பாங்கலராகிலும்
செயல் நன்றாகத் திருத்திப் பணி கொள்வான்
குயில் நின்றார் பொழில் சூழ் குருகூர்நம்பி
முயல்கின்றேன் உன்தன் மொய்கழற்கன்பையே

अपक्वबुद्धेरपि निष्फलस्य च
क्रियास्समीकृत्य मुदा प्रसेदिवन् ! ।
पिकाढ्यगुल्मे कुरुकापुरे स्थित!
प्रभो! परं ते पदयोः प्रियं यते ॥ १० ॥

11. அன்பன் தன்னை அடைந்தவர்கட்கெல்லாம்
அன்பன், தென்குருகூர் நகர் நம்பிக்கு
அன்பனாய் மதுரகவி சொன்ன சொல்
நம்புவார் பதி வைகுந்தம் காண்மினே.

प्रियं श्रियः कान्तमुपेयुषां सतां
प्रियस्य दासः कुरुकाशठद्विषः ।
कविर्यदूचे मधुरः प्रियोऽत्र तत्
परं पदं विश्वसतां पदं ध्रुवम् ॥ ११ ॥

***

நம்மாழ்வார் அருளிச் செய்த திருவாய்மொழி –

தனியன்கள்

॥ श्रीपराङ्कुशदिव्यसूरेः सहस्रगीतिप्रबन्धस्य मुखपद्यानि ॥

भक्तामृतं विश्वजनानुमोदनं
सर्वार्थदं श्रीशठकोपवाङ्मयम् ।
सहस्रशाखोपनिषत्समागमं
नमाम्यहं द्राविडवेदसागरम् ॥

திருவழுதி நாடென்றும் தென்குருகூர் என்றும்
மருவினிய வண்பொருநல் என்றும் – அருமறைகள்
அந்தாதி செய்தான் அடியிணையே எப்பொழுதும்
சிந்தியாய் நெஞ்சே! தெளிந்து. 2

*देशं श्रीवलुदेः तथा च कुरुकां तां दक्षिणां श्रीपुरीं
गम्भीरां ललितां च ताम्रसरितं संकीर्त्य चित्त ! स्फुटम् ।
गम्भीरान् अतिदुर्लभान् निजगिरा त्वन्तादिरूपेऽकरोत्
यो वेदान् सततं तदीयचरणावेव प्रचिन्त्यौ त्वया ॥२॥

---

* एतेषां द्रमिडमुखपद्यानां संस्कृतीकरणं विल्लूर् नडादूर् करुणाकरेण कृतम् ॥

மனத்தாலும் வாயாலும் வண்குருகூர் பேணும்
இனத்தாரை அல்லாது இறைஞ்சேன் – தனத்தாலும்
ஏதும் குறைவிலேன் எந்தை சடகோபன்
பாதங்கள் யாமுடைய பற்று. 3

*वाचा हृदा वा कुरुकापुरीं तां
समाश्रितानां गणतो बहिर्ये ।
न तान् भजेयं धनतो न हीनः
शठारिपादौ मम सर्वभूतौ ॥

ஏய்ந்த பெருங்கீர்த்தி இராமானுசமுனிதன்
வாய்ந்த மலர்ப்பாதம் வணங்குகின்றேன் –
ஆர்ந்த பெரும்
சீரார்சடகோபன் செந்தமிழ் வேதம் தரிக்கும்
பேராத உள்ளம் பெற. 4

*युक्तातिकीर्तेः यतिशेखरस्य रामानुजार्यस्य पादारविन्दे ।
दिव्ये भजेऽहं निरवद्यदीव्यत्ताद्दक्षकीर्तेः शठकोपसूरेः ।
लब्धुं हि चित्तं द्रमिडश्रुतीनां संधारणे पाटवदार्ढ्ययुक्तम् ॥४ ॥

---

* एतेषां द्रमिडमुखपद्यानां संस्कृतीकरणं विल्लूर् नडादूर् करुणाकरेण कृतम् ॥

வான்திகழும் சோலை மதிளரங்கர் வண்புகழ் மேல்
ஆன்ற தமிழ் மறைகள் ஆயிரமும் — ஈன்ற
முதல் தாய் சடகோபன் மொய்ம்பால் வளர்த்த
இதத்தாய் இராமானுசன். 5

* व्योमस्पृगुद्यानसुवप्रयुक्तरंगेशकल्याणगुणप्रशंसाः ।
आतन्वतीनां द्रमिडश्रुतीनां माता सवित्री शठकोपसूरिः ॥
संख्या सहस्रं भवतीह यासां तासां समारोहणतोऽतिमान्यात् ।
संवर्धने नित्यरतोपमाता रामानुजार्यो यतिराज इन्धे ॥ ५ ॥

மிக்க இறைநிலையும் மெய்யாமுயிர்நிலையும்
தக்க நெறியும் தடையாகித் — தொக்கியலும்
ஊழ்வினையும் வாழ்வினையும் ஓதும் குருகையர்கோன்
யாழினிசை வேதத்தியல். 6

* पत्युः प्रबन्धः कुरुकाजनानां वीणासनाभिः मधुरं प्रवक्ति ।
प्राप्यं परं जीवमथास्य मार्गं विघ्नीभवत्कर्म च मुक्तिसौख्यम् ॥६ ॥

***

---

* एतेषां द्रमिडमुखपद्यानां संस्कृतीकरणं विल्लूर् नडादूर् करुणाकरेण कृतम् ॥

॥ श्रीः ॥

॥ श्रीपराङ्कुशदिव्यसूरेः सहस्रगीतिप्रबन्धे स्थिताः श्रीवेङ्कटेश्वरपराः गाथाः तासां संस्कृतविवर्तनं च ॥

1. கண்ணா வானென்றும், – மண்ணோர்
விண்ணோர்க்கு
தண்ணார் வேங்கட, – விண்ணோர் வெற்பனே.

सुराणां च नराणां च नित्यं नेत्रायितः प्रभुः ।
स हि दीव्यति दिव्ये यश्शीतले वेंकटाचले ॥

2. எந்தாய்! தண் திருவேங்கடத்துள் நின்ருய்!
இலங்கை செற்ருய்! மராமரம்
பைந்தாளுருவ ஒரு வாளி
கோத்த வில்லா!
கொந்தார் தண்ணந்துழாயினுய் அமுதே!
உன்னை என்னுள் குழைத்த எம்
மைந்தா! வானநேறே!
இனி எங்குப் போகின்றதே.

श्रीवेंकटे स्थित विभो जितलंक शीते
सप्तायतद्रुमभिदेकशरैरिधन्वन् ।
वैकुण्ठ बद्धतुलसीस्तबकामृतैवं
अन्तस्समेत्य मम नाथ कुतोऽसि गन्ता ॥

3. போகின்ற காலங்கள் போய காலங்கள்
போகு காலங்கள், தாய்தந் தையுயிர்
ஆகின்றாய்! உன்னைநான்
அடைந்தேன் விடுவேனோ,
பாகின்ற தொல்புகழ் மூவுலகுக்கும்
நாதனே! பரமா, தண்வேங்கடம்
மேகின்றாய்! தண்டுழாய்
விரைநாறு கண்ணியனே!

जह्यां कथं प्रचलदेष्यदपेतकाले
त्वां मातरं पितरमाप्य ममात्मभूतम् ।
त्रैलोक्यनाथ सुयशः स्थित वेंकटाद्रौ
सामोद हे परम शीतलया तुलस्या ॥

4. பற்ப நாபன் உயர்வற
வுயரும் பெருந்திறலோன்,
எற்பர னென்னை யாக்கிக்கொண்
டெனக்கே தன்னைத்தந்த
கற்பகம், என்னமுதம் கார்முகில்
போலும் வேங்கடநல்
வெற்பன், விசும்போர்
பிரானெந்தை தாமோ தரனே.

निस्सीमशक्तियुगनुत्तमपद्मनाभः
कृत्वाऽर्थिनं जनमिमं वितरन् स्वयं स्वम् ।
कल्पद्रुमो मदमृतं श्रितवेंकटाद्रिः
दामोदरः परमधामपतिर्घनाभः ॥

5. வார்புனல் அந்தண் ணருவி
வடதிரு வேங்கடத் தெந்தை,
பேர்பல சொல்லிப் பிதற்றிப்
பித்தரென் றேபிறர் கூற,
ஊர்பல புக்கும் புகாதும்
உலோகர் சிரிக்கநின் றாடி,
ஆர்வம் பெருகிக் குனிப்பார்
அமரர் தொழப்படு வாரே.

शीतोदपूरझरवेंकटनाथनाम
मत्ता इतीतरजनैः कथिता गृणन्तः ।
ग्रामेषु वा बहिरतो हसतां जनानां
नृत्यन्त उत्सुकतया पुरतोऽमरेड्याः ॥

6. சொன்னால் விரோதமிது
ஆகிலும் சொல்லுவன் கேண்மினோ,
என்னாவில் இன்கவி யானொரு
வர்க்கும் கொடுக்கிலேன்,
தென்னா தெனாவென்று வண்டு
முரல்திரு வேங்கடத்து,
என்னானை என்னப்பன்
எம்பெரு மானுள னாகவே.

द्वेषो ब्रुवे यदि तथाऽपि शृणु प्रवच्मि
कस्मैचन स्वकवितां मधुरां न दद्याम् ।
तन्नातनेत्यलिनिनादिनि वेङ्कटाद्रौ
नाथादुदारकवितावविषयात्परस्मै ॥

7. மாரி மாறாத தண்ணம்மலை
வேங்கடத் தண்ணலை,
வாரி மாறாத பைம்பூம்
பொழில்சூழ் குருகூர்நகர்,
காரி மாறன் சடகோபன்
சொல்லாயிரத் திப்பத்தால்,
வேரி மாறாத பூமே
லிருப்பாள் வினைதீர்க்குமே.

वर्षाशीते यदधिपतये वेंकटाद्रौ स्थिताय
फुल्लारण्याभ्भरितकुरुकाकारिमारश्शठारिः ।
ऊचे तेन ह्युदितदशकेनोदितश्रीसहस्रे
नित्यामोदाम्बुरुहवसतिर्नाशयेत्सर्वमेनः ॥

8. கட்டெழில் சோலைநல் வேங்கட வாணனை,
கட்டெழில் தென்குரு கூர்ச்சட கோபன்சொல்,
கட்டெழில் ஆயிரத் திப்பத்தும் வல்லவர்,
கட்டெழில் வானவர் போகமுண் பாரே.

वासाभिरामवनवेंकटनाथनाथाः
दुर्गाभिरामकुरुकाशठकोपगाथाः ।
काव्याभिरामसुसहस्रगता दशेयुः
पूर्णाभिरामसुरभोगमिमाः पठन्तः ॥

9. நங்கள் வரிவளை யாயங் காளோ!
நம்முடை ஏதலர் முன்பு நாணி
நுங்கட் கியானென்று ரைக்கு மாற்றம்
நோக்குகின் றேனெங்கும் காண மாட்டேன்,
சங்கம் சரிந்தன சாயி மூந்தேன்
தடமுலை பொன்னிற மாய்த்த ளர்ந்தேன்,
வெங்கண் பறவையின் பாக னெங்கோன்
வேங்கட வாணனை வேண்டிச் சென்றே.

सख्यस्सुजातवलयास्त्रपया रिपूणां
अग्रे न कर्तुमवसादकथां क्षमा स्वाम् ।
सन्ना गलत्सुवलया स्तनहेमवर्णा
तीक्ष्णाक्षपक्षिरथवेंकटनाथलिप्सुः ॥

10. இன்றிப் போக இருவினை யும்கெடுத்து
ஒன்றி யாக்கை புகாமையுய் யக் கொள்வான்,
நின்ற வேங்கடம் நீணிலத் துள்ளது,
சென்று தேவர்கள் கைதொழு வார்களே.

उन्मूल्य यत् सुकृतदुष्कृतवासनां नः
उज्जीवयत्यसुख संसरणं निरस्य ।
उर्वीतले विजयमानममुष्य देवाः
उत्थास्नुवेंकटमुदञ्जलयो नमन्ति ॥

11. மேயான் வேங்கடம், – காயா மலர்வண்ணன்,
பேயார் முலையுண்ட, – வாயான் மாதவனே,

श्रीवेंकटे तिष्ठति वेंकटेशः
तमालपुष्पामलनीलकायः ।
स्तन्यं स्ववक्त्रेण हि पूतनायाः
पपौ स यो माधव एष एव ॥

12. திருமா லிருஞ்சோ லைமலையே
திருப்பாற் கடலே என்தலையே
திருமால் வைகுந் தமேதண்
திருவேங் கடமே எனதுடலே,
அருமா மாயத் தெனதுயிரே
மனமே வாக்கே கருமமே,
ஒருமா நொடியும் பிரியானென்
ஊழி முதல்வன் ஒருவனே.

क्षीरोदधिं मम शिरोऽप्यथ सुन्दराद्रिं
वैकुण्ठधाम मम वर्ष्म च वेंकटाद्रिम् ।
मायावृतात्मयुतमानसकर्मवाचः
सृष्ट्यादिरुज्झति न हि क्षणमेष एकः ॥

***

॥ श्रीः ॥

திருவாய்மொழி 3ஆம் பத்து 3ஆம் திருவாய்மொழி

ஒழிவில் காலம்

1. ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி,
வழுவிலா அடிமை செய்ய வேண்டும்நாம்,
தெழிகு ரல்அரு வித்திரு வேங்கடத்து,
எழில்கொள் சோதி எந்தைதந்தை தந்தைக்கே.

पार्श्वस्थितैस्सममजस्त्रमनन्तकालं
अस्माभिरस्खलितदास्यमितो विधेयम् ।
सौम्याय मर्मरितनिर्झरवेंकटे नः
सज्ज्योतिषे स्थितिमते पितृतातपित्रे ॥

2. எந்தை தந்தை தந்தை தந்தைக்கும்
முந்தை, வானவர் வானவர் கோனொடும்,
சிந்துபூ மகிழும் திருவேங் கடத்து,
அந்த மில்புகழ்க் காரெழில் அண்ணலே.

मत्तातताततपितृतातपितुस्स पूर्वः
सेनाधिपेन सहसूरिभिरीर्यमाणैः ।
पुष्पैर्हसद्भिरभिशोभिनि वेंकटाद्रौ
श्यामः पतिर्ललितमूर्तिरनन्तकीर्तिः ॥

3. அண்ணல் மாயன் அணிகொள்செந் தாமரைக்
கண்ணன், செங்கனி வாய்க்கரு மாணிக்கம்,
தெண்ணி றைச்சுனை நீர்த்திரு வேங்கடத்து,
எண்ணில் தொழ்புகழ் வானவ ரீசனே.

रम्यारुणाब्जनयनः प्रभुरेष मायी
नीलो मणिस्स परिपक्वफलारुणोष्ठः ।
स्वच्छाच्छवर्णजलनिर्झरवेंकटाद्रौ
नैसर्गिकाविगणनार्हयशास्सुरेशः ॥

4. ஈசன் வானவர்க் கென்பனென் றால்,அது
தேச மோதிரு வேங்கடத் தானுக்கு?,
நீச னேன்நிறை வொன்றுமி லேன்,என்கண்
பாசம் வைத்த பரஞ்சுடர்ச் சோதிக்கே.

तं निर्जरेश इति वच्मि यदीयता किं
तेजोगुणो भवति वेंकटभर्तुरुक्तः ।
नीचेऽपि निर्गुणतमे मयि वत्सलस्य
सज्ज्योतिषोऽर्चिरुदयैर्ज्वलतः परस्य ॥

5. சோதி யாகியெல் லாவுல கும்தொழும்,
ஆதி மூர்த்தியென் றூலள வாகுமோ?,
வேதி யர்முழு வேதத் தமுதத்தை,
தீதில் சீர்த்திரு வேங்கடத் தானையே.

ज्योतिर्भवन्नखिललोकसभाज्यमानः
आदिस्स मूर्तिरिति वर्णनमस्त्यलं किम् ।
सद्विप्रवेदगणसारतमामृतस्य
हेयघ्नषड्गुणवतश्श्रितवेंकटाद्रेः ॥

6. வேங்க டங்கள்மெய்ம் மேல்வினை முற்றவும்,
தாங்கள் தங்கட்கு நல்லன வேசெய்வார்,
வேங்க டத்துறை வார்க்கு நமவென்ன
லாங்க டமை,அ துசுமந் தார்கட்கே.

संतन्यमानविहितप्रतनिष्यमाण -
पापं हि दग्धमखिलं स्वहितोद्यतानाम् ।
श्रीवेंकटालयवते नम इत्युदीर्य
मूर्धाहिताञ्जलिभृतां ननु सत्यमेतत् ॥

7. சுமந்து மாமலர் நீர்சுடர் தீபம்கொண்டு,
அமர்ந்து வானவர் வானவர் கோனொடும்,
நமன்றெ ழும்திரு வேங்கடம் நங்கட்கு,
சமன்கொள் வீடு தரும்தடங் குன்றமே.

पुष्पं महार्हमुदकं शुभदीपधूपौ
सेनाधिपेन सह सूरय एत्य धृत्वा ।
नत्वोत्थितास्तमिममायतवेंकटाद्रिं
मोक्षस्य साम्यसहितस्य वितारकं नः ॥

8. குன்றம் ஏந்திக் குளிர்மழை காத்தவன்
அன்று ஞாலம் அளந்த பிரான் பரன்
சென்று சேர்திரு வேங்கட மாமலை
ஒன்று மேதொழ நம்வினை ஓயுமே.

वर्षाद्ररक्ष शिशिरादपि यो धृताद्रिः
यस्त्रीन् परः प्रभुरिमानमिमीत लोकान् ।
तेनास्थितं महितवेंकटशैलमेव
पापानि नः प्रणमतां प्रशमं प्रयान्ति ॥

9. ஒயு மூப்புப் பிறப்பிறப் புப்பிணி,
வீயு மாறுசெய் வான்திரு வேங்கடத்
தாயன் நாண்மல ராமடித் தாமரை
வாயுள் ளும்மனத் துள்ளும்வைப் பார்கட்கே.

वार्धक्यजन्ममरणानि न सन्ति तेषां
व्याधिः प्रशाम्यति च वेंकटमास्थितस्य ।
गोपस्य फुल्लपद्पंकजमन्तरंगे
ये नित्यमात्मलपनेऽपि निवेशयन्ति ॥

10. வைத்த நாள்வரை எல்லை குறுகிச்சென்று,
எய்த்தி ளைப்பதன் முன்னம் அடைமினோ,
பைத்த பாம்பணை யான்திரு வேங்கடம்,
மொய்த்த சோலைமொய் பூந்தடம் தாழ்வரே.

निर्णीतसंस्थितिदिनावधि नो विलम्ब्य
यावद्बलं न वपुषो व्यपयाति तावत् ।
मूर्च्छत्फणाधरशयालयवेंकटाद्रेः
कान्तारमाश्रयत कान्तमुपत्यकायाम् ॥

11. தாள்ப ரப்பிமண் தாவிய ஈசனை,
நீள்பொ ழில்குரு கூர்ச்சட கோபன்சொல்,
கேழில் ஆயிரத் திப்பத்தும் வல்லவர்,
வாழ்வர் வாழ்வெய்தி ஞாலம் புகழவே.

विक्रम्य तं प्रति विभुं मितलोकपादं
उद्यानहृद्यकुरुकाशठकोपगीते ।
गाथा दशातुलसहस्र इमाः पठन्तः
लोकप्रशंसितमहोत्तरजीवनास्स्युः ॥

***

॥ श्रीः ॥

திருவாய்மொழி 6ஆம் பத்து 10ஆம் திருவாய்மொழி

உலகம் உண்ட

1. உலகம் உண்ட பெருவாயா!
உலப்பில் கீர்த்தி யம்மானே,
நிலவும் சுடர்சூ ழொளிமூர்த்தி!
நெடியாய்! அடியே னுருயிரே,
திலதம் உலகுக் காய்நின்ற
திருவேங் கடத்தெம் பெருமானே,
குலதொல் லடியேன் உன்பாதம்
கூடு மாறு கூறுயே.

भुवनगिलमहास्यानन्तकीर्तेऽखलेश
तरललितभास्वन्नन्तरात्मन्ननन्त ।
तिलक इव भुवश्श्रीवेंकटे मत्प्रभो त्वं
वद कुलकृतदास्यस्ते यथा पादमीयाम् ॥

2. கூறுய் நீறுய் நிலனுகிக்
கொடுவல் லசுரர் குலமெல்லாம்,
சீறு எறியும் திருநேமி
வலவா! தெய்வக் கோமானே,
சேறுர் சுனைத்தா மரைசெந்தீ
மலரும் திருவேங் கடத்தானே,
ஆறு அன்பில் அடியேனுன்
அடிசேர் வண்ணம் அருளாயே.

दलितमृदितधूलीभूतदुर्दैत्यवंश -
ज्वलदनलरथांगाधीश देवाधिराज ।
जलमलनलिनोद्यद्रागयुग्वेंकटेश
प्रपदनमुपदिश्यास्त्वत्पदे प्रेमिणो मे ॥

3. வண்ண மருள்கொள் அணிமேக
வண்ணு! மாய அம்மானே,
எண்ணம் புகுந்து தித்திக்கும்
அமுதே! இமையோர் அதிபதியே,
தெண்ணல் அருவி மணிபொன்முத்
தலைக்கும் திருவேங் கடத்தானே,
அண்ணலே!உன் அடிசேர
அடியேற் காவா வென்னுயே.

अपहरदभिरामाम्भोदवर्णाय्यं मायिन्
मधुरयदमृतान्तस्स्वान्तमेत्यामरेश ।
समणिकनकमुक्ताच्छाब्झरे वेंकटाद्रौ
तव चरणयुगं मां नाथ नेतुं दयस्व ॥

4. ஆவா வென்ளு துலகத்தை
அலைக்கும் அசுரர் வாணுள்மேல்,
தீவாய் வாளி மழைபொழிந்த
சிலையா! திருமா மகள்கேள்வா,

தேவா சுரர்கள் முனிக்கணங்கள்
விரும்பும் திருவேங் கடத்தானே,
பூவார் கழல்கள் அருவினையேன்
பொருந்து மாறு புணராயே.

अदयकदितसर्वक्ष्माऽसुरायुःक्षयार्थं
अनलमुखपृषत्कोद्वर्षिधन्वन् रमेश ।
मुनिगणसुरबृन्दैः वाञ्छिते वेंकटाद्रौ
सुमवति तव पादे देव मां योजयेथाः ॥

5. புணரா நின்ற மரமேழன்
றெய்த வொருவில் வலவாவோ,
புணரேய் நின்ற மரமிரண்டின்
நடுவே போன முதல்வாவோ,
திணரார் மேகம் எனக்களிறு
சேரும் திருவேங் கடத்தானே,
திணரார் சார்ங்கத் துனபாதம்
சேர்வ தடியே னெந்நாளே?

दलितनिबिडसप्तानोकहेष्वास आहो
यमलविटपिमध्योत्क्रान्त आदिस्त्वमाहो ।
सजलघननिभेभैः मंडिते वेंकटाद्रौ
तव चरणमुपेयां स्फीतशार्ङ्गिन् कदाऽहम् ॥

6. 'எந்நா ளேநாம் மண்ணளந்த
இணைத்தா மரைகள் காண்பதற்லெ'கன்று,
எந்நா ளும்நின் றிமையோர்கள்
ஏத்தி யிறைஞ்சி யினமினமாய்,
மெய்ந்நா மனத்தால் வழிபாடு
செய்யும் திருவேங் கடத்தானே,
மெய்ந்நா னெய்தி யெந்நாளுன்
அடிக்கண் அடியேன் மேவுவதே?

चरणनलिनयुग्मं लोकमातृ त्वदीयं
अनवरतमुपेतैर्द्रष्टृभिस्सूरिबृन्दैः ।
तनुवदनमनोभिर्वेंकटेशेडयमान
पदमधि तव सत्यं स्वं कदा योजयेयम् ॥

7. அடியேன் மேவி யமர்கின்ற
அமுதே! இமையோர் அதிபதியே,
கொடியா அடுபுள் ளுடையானே!
கோலக் கனிவாய்ப் பெருமானே,
செடியார் வினைகள் தீர்மருந்தே!
திருவேங் கடத்தெம் பெருமானே,
நொடியார் பொழுதும் உன்பாதம்
காண நோலா தாற்றேனே.

दिविषदधिपते मे भोग्यपीयूषभूत
रिपुहृपतगकेतो पक्वबिम्बौष्ठ नाथ ।
उपचितमललुप्त्यै वेंकटेशौषधैक
क्षणमपि तव पादादर्शनं नो सहेय ॥

8. நோலா தாற்றேன் நுன்பாதம்
காண வென்று நுண்ணுணர்வில்,
நீலார் கண்டத் தம்மானும்
நிறைநான் முகனு மிந்திரனும்,
சேலேய் கண்ணார் பலர்சூழ
விரும்பும் திருவேங் கடத்தானே,
மாலாய் மயக்கி யடியேன்பால்
வந்தாய் போலே வாராயே.

व्रतमपि न कृतं पद्दर्शनार्थं मया ते
सुरपतिशितिकण्ठस्त्रष्टृभिस्सूक्ष्मधीभिः ।
कृतयुवतिभिरग्रे काम्यसे वेंकटेश
त्वमुपसर समायो मामुपागा यथा प्राक् ॥

9. வந்தாய் போலே வாராதாய்!
வாரா தாய்போல் வருவானே,
செந்தா மரைக்கட் செங்கனிவாய்
நால்தோ ளமுதே! எனதுயிரே,
சிந்தா மணிகள் பகரல்லைப்
பகல்செய் திருவேங் கடத்தானே,
அந்தோ! அடியேன் உன்பாதம்
அகல கில்லேன் இறையுமே.

उपगतवदपेतस्सन्नपेतोऽभ्युपेतोऽ
म्बुजनयनचतुर्दोः तात! बिंबाधरात्मन् ।
दिन इव निशि रत्नैर्वेंकटाद्रौ स्थितेद्धे
क्षणमहह पदाभ्यामेष ते न व्यपेयाम् ॥

10. 'அகல கில்லேன் இறையும்'என்
றலர்மேல் மங்கை யுறைமார்பா,
நிகரில் புகழாய்! உலகமூன்
றுடையாய்! என்னை ஆள்வானே,
நிகரில் அமரர் முனிக்கணங்கள்
விரும்பும் திருவேங் கடத்தானே,
புகலொன் றில்லா அடியேனுன்
அடிக்கீ ழமர்ந்து புகுந்தேனே.

क्षणमहमपयायां नेति लक्ष्म्याऽऽश्रितोरः
त्रिभुवनपतिभूतातुल्यकीर्ते मदीश ।
अतुलमुनिसुरेष्टस्येशितर्वेङ्कटस्य
शरणमशरणस्त्वत्पादमद्य प्रपद्ये ॥

11. 'அடிக்கீ ழமர்ந்து புகுந்தடியீர்!
வாழ்மின்' என்றென் றருள்கொடுக்கும்
படிக்கே ழில்லாப் பெருமானைப்
பழனக் குருகூர்ச் சடகோபன்,
முடிப்பான் சொன்ன ஆயிரத்துத்
திருவேங் கடத்துக் கிவைபத்தும்,
பிடித்தார் பிடித்தார் வீற்றிருந்து
பெரிய வானுள் நிலாவுவரே.

प्रपदनपरमंघ्रिं प्राप्य मे जीवतेति
स्थलजलकुरुकौकश्श्रीशठद्विट्सहस्त्रे ।
स्वदितुरुदितगाथाः वेंकटार्थं दशेमाः
परपदमधि भोगाः रोचितुस्स्युर्विलासाः ॥

काव्यप्रणेता

नाम : श्री श्री. सुन्दरराजः, पिताः श्रीमदाशुकविसार्वभौम-विल्लूर् श्रीनिवासराघवाचार्यस्वामी. माताः श्रीमती वञ्जुलवल्ली. जन्मतिथिः १३-१-१९३६ ई. (जन्मस्थानं : तञ्जावूर् जनपदान्तर्गत देवनाथविलास ग्रामः) शिक्षाः एम.ए. आइ.ए.एस. (प्राप्तावकाशः), रचना : श्रीजगन्नाथसुप्रभातादि, श्रीबदरीशतरङ्गिणी, सुरश्मिकाश्मीरम्, हनुमत्पञ्चाशत्, अभागभारतं, तथान्याः स्फुटाः कविताः, आवाससङ्केतः २१, वी.आई.पी. कालोनी, एकाम्रविहारः, नयापल्ली, भुवनेश्वर्-७५१०१५.

The Author :

S. Sundararajan, M.A., I.A.S. (Retd.) Born on: 13-9-1936. Father: Śrimadāśukavisārvabhauma Villūr Srinivasa Raghavacharya Swami. Mother: Smt. Vanjulavalli. Author of Sri Jagannātha Suprabhātam & other Stotras, Hanumatpachasat, Sri Badarīśataraṅgiṇi, Suraśmikāśmīram, Abhagha Bharatam etc. Resi. 21, V.I.P. Colony, Ekamravihar, Nayapalli, Bhubaneswar-751015.